செய்தி வெளியீடு எண்: 810 நாள் : 22.09.2010

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பில்

## 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்ற 38 மாணவ மாணவியருக்கு மொத்தம் 10 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் பரிசுத் தொகை! பாராட்டுச் சான்றிதழ்கள்!

## முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்!

அரசுப் பொதுத் தேர்வுகள் துறை ஆண்டுதோறும் நடத்திடும் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புகளுக்கான தேர்வுகளில் பங்கு கொண்டு, தேர்ச்சிகண்டு, மாநில அளவிலான அதிக மதிப்பெண்கள் பெற்று ஆதிதிராவிடர், பழங்குடியினர், மதம்மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் பிரிவுகள் ஒவ்வொன்றிலும் முதலிடம் பெற்ற ஒரு மாணவர், ஒரு மாணவி வீதம் தேர்வு செய்து, 10ஆம் வகுப்பிற்கு ஆறு பரிசுகளும், 12ஆம் வகுப்பிற்கு ஆறு பரிசுகளும் என 12 பரிசுகள் வழங்கும் திட்டம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையினால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

,இத்திட்டத்தின்கீழ் 10ஆம் வகுப்பில் மாநில முதன்மை பெற்ற ஆறு மாணவ மாணவியர்க்கும் இதுவரை தலா 10 ஆயிரம் ரூபாய் வீதமும், 12ஆம் வகுப்பில் மாநில முதன்மை பெற்ற ஆறு மாணவ மாணவியர்க்கும் தலா 25 ஆயிரம் ரூபாய் வீதமும் ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன. இரண்டாம் பரிசுகளும், மூன்றாம் பரிசுகளும் இதுவரை வழங்கப்பட்டதில்லை. நடப்பு ஆண்டு முதல் 10 மற்றும் 12ஆம் வகுப்பு ஒவ்வொன்றிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் ஆகிய ஒவ்வொரு பிரிவிலும் முதல் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு என தலா மூன்று பரிசுகளை வழங்கிடவும்;

10ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண்களில் முதல் இடம் பெற்றவர்களுக்கு வழங்கப்பட்ட 10 ஆயிரம் ரூபாய் பரிசுத்தொகையை 25 ஆயிரம் ரூபாய் என உயர்த்தி, இரண்டாம் இடம் பெற்றவர்களுக்கு 20 ஆயிரம் ரூபாய், மூன்றாம் இடம் பெற்றவர்களுக்கு 15 ஆயிரம் ரூபாய் என பரிசுத் தொகைகள் வழங்கிடவும்;

12 ஆம் வகுப்பில் முதல் இடம் பெற்றவர்க்கு வழங்கப்பட்ட 25 ஆயிரம் ரூபாய் பரிசுத்தொகையை 50 ஆயிரம் ரூபாய் என உயர்த்தி, இரண்டாம் இடம் பெற்றவர்களுக்கு 30 ஆயிரம் ரூபாய், மூன்றாம் இடம் பெற்றவர்களுக்கு 20 ஆயிரம் ரூபாய் எனப் பரிசுத்தொகைகள் வழங்கிடவும் முதலமைச்சர் கலைஞர் ஏற்கனவே ஆணையிட்டிருந்தார்.

அந்த ஆணையின்படி, தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் தமிழை ஒரு பாடமாகப் படித்து 2010 மார்ச்சுத் திங்களில் நடைபெற்ற 10ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்ற ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த ஏழு மாணவ, மாணவியர்; பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த நான்கு மாணவ மாணவியர்; கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த ஏழு மாணவ மாணவியர் என 18 மாணவ மாணவியர்க்கு மொத்தம் 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளையும்;

12ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்ற ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த ஏழு மாணவ, மாணவியர்; பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த ஆறு மாணவ மாணவியர்; கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த ஏழு மாணவ மாணவியர் என 20 மாணவ மாணவியர்க்கு மொத்தம் 6 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளையும் ஆக 38 மாணவ மாணவியர்க்கு மொத்தம் 10 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய்க்கான பரிசுத் தொகைகளை முதலமைச்சர் கலைஞர் இன்று (22.9.2010) வழங்கி வாழ்த்துகள் கூறினார்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் பரிசுத் தொகைகளையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் பெற்ற மாணவ, மாணவியரும் அவர்களுடைய பெற்றோர்களும் மிகுந்த மகிழ்ச்சி அடைந்து முதலமைச்சர் அவர்களுக்கு தங்களுடைய நன்றியைத் தெரிவித்து தமிழக அரசைப் பாராட்டினர்.

இந்நிகழ்வின்போது, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி ஆ. தமிழரசி, ஆதிதிராவிடர் நலத்துறை முதன்மைச் செயலாளர் திரு. விஷ்வநாத் அ. ஷெகாவ்கர், இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் திரு. பொ.சிவசங்கரன், இ.ஆ.ப., பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் திரு. உ.இரவீந்திரன், இ.வ.ப. ஆகியோர் உடனிருந்தனர்.

*****

<u>வெளியீடு:–</u>

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.